வழங்கப்பட்ட இடம், சிலரால் ஆக்கிரமிக்கப்பட்டு தவறாக விற்கப்பட்டிருக்கின்றது. இன்று அந்த நிலம் தவறான முறையிலே விலையாடப்பட்டிருக்கிறது என்ற செய்தியை நம்முடைய அரசு நியமித்த விசாரணை ஆணையம், விசாரணை செய்து இறுதி அறிக்கை தந்திருக்கிறது. இதிலே தமிழக அரசினுடைய தலைமைச் செயலாளர் அவர்கள், என்ன நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு உத்தரவிட்டிருக்கிறார்கள் என்றால் "The Commissioner of Land Administration and the District Collector of Kancheepuram will take steps to resume the said lands in Siruthavur village, Chengalpet Taluk, Kancheepuram District in accordance with law for distribution of land to deserving landless among poor and SC/ST categories" என்று நம்முடைய தலைமைச் செயலாளர் அவர்களும் உடனடியாக உத்தரவிட்டிருக்கிறார்கள். ஆனால், அந்த உத்தரவு, உச்ச நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கின்ற ஒரு வழக்கு முடிகிறவரை அதன் நடவடிக்கைகள், நிறுத்தி வைக்கப்பட்டிருக்குமென்று சொல்லியிருக்கிறார்கள். உச்ச நீதிமன்றத்திலே என்ன வழக்கு இருக்கிறது, அது யார் போட்ட வழக்கு, அது எப்பொழுது முடியும், அந்த வழக்கை விரைவாக முடித்து விரைந்து சம்பந்தப்பட்ட ஆதி திராவிட மக்களுக்கு அந்த நிலத்தினை வழங்க அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

5. அறிவிப்புகள்

(அ) சட்டப் பேரவையின் அங்கீகரிக்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களுக்குப் பேனா, சுருக்கெழுத்துக் குறிப்பேடுகள் வழங்குதல்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கிணங்க தமிழ்நாடு சட்டப் பேரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்ட பத்திரிகையாளர்கள் மற்றும் செய்தியாளர்களுக்கான பேனா மற்றும் சுருக்கெழுத்துக் குறிப்பேடுகளை, சட்டப் பேரவைச் செயலக சட்டமுன்வடிவு பிரிவு–2–லிருந்து இன்று முதல் பெற்றுக்கொள்ளலாம் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.